# எலிக்கூடு

★



★

திக்குவல்லை-கமால்

## உணர்த்தல்

என்றோ... எப்பொழுதோ
வாங்கிய
எனது பழைய சேட்டைத்
தொட்டுப்பார்த்து
"என்ன விலே?"
என்று கேட்டான்
நண்பன்,
அப்பொழுதுதான்
நான் பார்த்தேன்
அவன்
புதிய சேட்டொன்று
போட்டிருந்தான்

(சிரித்திரன்)

## முடிவளர்ப்பு

சமுதாய அமைப்பை வெறுத்துப்
புதுச் சமுதாயமாய்ப்
படையெடுத்த ஹிப்பீஸின்
புறத்தைக் காப்பியடித்த,
நவநாகரிகத்தால்
ஏழையெனக்கு—
மாதாமாதம்
ஒரு ரூபா நயம்!

(கலையாழி)

## தலைமைகள்

வேலி அடைப்புக்குள்
சிரம் தாழ்த்திச்
சொன்னதை ஏற்று...
சேவகம் செய்தபோது
தடவித் தந்து,
புன்னகை சிந்திய
நீங்கள்
தத்திப் பிடித்து
எப்படியோ ஏறி
வெளியுலகை
எட்டிப் பார்த்தபோது
எங்களை—
சீறிச் சினந்து
குட்டிக் குனியவைக்க
முயல்வதேன்...?

(மல்லிகை)

குகன் அச்சகம், தெல்லிப்பழை

## எலிக்கூடு

நானோர் தொழிலாளி
நாளாந்தம்—
இரும்புக் கடைதனிலே வேலை
பார்க்கின்ற பேர்வழி!

ஒற்றை நாழிகைக்குள்
எத்தனையோ மனிதர்களைச்
சந்தித்து உரையாடும்
சந்தர்ப்பம் கிடைக்கிறது.

அன்றொருநாள்...
குழிவிழுந்த கண்களும்
தளருடலும் கொண்ட
ஒருமனிதர் எனையண்மி,

"தம்பி, எலிக்கூடு உண்டோ?"
என வினவ
"இல்லை, எலிப்பொறிதான் இங்குளது"
என்றேன் நான்.

"பாவம், பொறியிலவை
பின்னி இறந்திடுமே!
தேவை கூடொன்றே
சிக்கிவிட்ட பின்பவற்றைத்
தூரக் கொண்டுபோய்த்
திறந்திடலாம் ஆதலினால்
மேலும் தேடுகிறேன்"
எனமொழிந்து விடைபெற்றார்
விடை பெற்றாரா...?

அற்ப ஆசைக்கும்
சொற்ப எதிர்ப்புக்கும்
மனிதனை மனிதன்
அநியாயமாய்க் கொன்றும்
வெட்டியும் குத்தியும்
வெறிதீர்க்கும் இந்நாளில்...

தீங்கு விளைவிக்கும்
சிற்றுயிரே யாகிடினும்
பாங்கான முறையிலதைப்
பெயர்த்துவிட வழிதேடி
ஏங்கி அலைகின்ற...
குழிவிழுந்த கண்களும்
தளருடலும் கொண்ட
அம்மனிதன் இன்னுந்தான்
விடை பெறவில்லை;
என்னுள்ளத்தில்...
வீற்றிருக்கின்றார்!

(மல்லிகை)

## துக்கம்

பாலுக்கழும் பாலகனையும்
வெறும் முலையைத் தடவியபடி
பரிதவிக்கும் தாயையும்,
உழைத்துக் களைத்து வந்து
குறட்டை விட்டுத் தூங்கும்
தந்தையையும் கண்ட,
குப்பி விளக்கு—
தன்னிட மிருந்த
எண்ணெய் சிறிதையும்
தானம் செய்துவிட்டுத்
துக்கம் அனுஷ்டித்தது.

(கணையாழி)

## வடுக்கள்

கைகளிற் புண்கள்
மாறிவிட்டன.
அவற்றைப் பார்த்து
நெருங்கிப் பழகியோர்
முகத்தைச் சுளித்து
நகர்ந்தபோது,
ஏற்பட்ட
நெஞ்சப் புண்கள்
மாறவேயில்லை

(சிரித்திரன்)

## 'ஓவர்டைம்'

விளக்கொளிர,
மின்விசிறி சுழல,
மேசையின் முன்னமர்ந்து
பைல்களை விரித்தபடி—
சிரித்துக் கதைத்து
நேரத்தை நகர்த்துகையில்
அரசாங்கப் பணம்
வீணாய்த் தொலைந்தது!

(வீரகேசரி)

## வெற்றிச்சின்னங்கள்

ஆண்டு பற்பல—
மழையில் நனைந்து,
வெய்யிலிற் காய்ந்து,
வேர்வையில் தோய்ந்த,
விவசாயியின் கோட்டில்
விழுந்திருக்கும் பொத்தல்கள்...
மண்ணைச் செழிப்பாக்கி
மக்களுக் குணவளிப்பதற்காய்
இயற்கையளித்த
வெற்றிச் சின்னங்கள்!

(கற்பகம்)

## சமூகசேவையாளர்

பொதுச் சனங்களை
வாட்டி
வதைத்துக்
கசக்கிப் பிழிந்து
பெட்டி நிறைத்து,
அதில்—
ஆயிரத்திலொன்றை
நிருபர்
கெமராக்காரர்
முன்னிலையில்
முழுத்தாள்களாக,
இழுத்துக்
கொடுத்துவிட்டால்
சமூக சேவையாளர்!

(இதயம்)



## கீழ்சாதி

பழைய பரம்பரைப் பாதிப்பு
அந்தச்
சிறுர்களிடையும்
செறிந்து கிடந்தது.
அவர்களை நோக்கி

"உயர்வு தாழ்வு
எம்மிடை இல்லை,
மனித குலத்தில்
யாவரும் ஒன்றே"
என்று பகர்ந்தேன்.

அடுத்தநாள் அவ்வூரில்
ஒருபுகை படர்ந்தது
"அந்த மாஸ்டரும் கீழ்சாதியாம்"

(பூரணி)

## மடமை

சிறுவர் பத்திரிகையில்
பெரியதோர் விளம்பரம்
'அறிவு வளர்ச்சிக்கு
ஆஹா பீடி பாவியுங்கள்'
..............?

(அணு)

## வேட்டு

இரும்புப் பெட்டியில்
நிறையும் நோட்டு;
வறியோர் வயிற்றில்
வைக்கும் வேட்டு!

(சிரித்திரன்)

## குழந்தை

தங்கள் கருப்பை
ஊதிக் கொழுத்து
குழல் வழியாக
வந்து விழுந்தால்தான்
குழந்தையா ?
அதற்காக
எத்தனை ஆண்டுகள்
இரவிரவாக
முயற்சித்தும் முடியாமல்போக,
ஈற்றில்
இறைவனுக்கும் அழைப்பா ?
இன்றேல்—
பிரார்த்தனை...
நேர்த்தி...
திருத்தலப் பயணங்கள்...
எல்லாம் எதற்கு ?
பாதைப் புழுதியில்
சாக்கடை அழுக்கில்
பராமரிப்பற்றுப்
பரிதவிக்கும் குழந்தைகளை
வாரி அணைத்து...
ஆதரவு செய்தால்
பெண்மையிலென்ன
பூஞ்சணமா மொய்க்கும் ?

(கணையாழி)



## போதகர்

தூசி துகள்களைப்
பெருக்கும்
துடைப்பங் கட்டை.
நாட்பட நாட்பட
அதிலே—
தூசி துகள்கள் !

(தமிழமுது)

## புதுமை...?

'மாத்திரை உணவுக்
காலம் வந்தால்...
'வேண்டாம் எமக்கு
உலையில் சமைத்த
உணவே தா' — எனச்
சந்தியில் குந்திச்
சத்தியாக்கிரகம் செய்வோம்.

(மல்லிகை)

## அகக்குருடு

அழகான மாடிவீடு
அங்கிருந்து—
எஞ்சிக் கொட்டிய உணவு
அதற்காய்—
நாலைந்து நாய்கள் சண்டை
தெருவோரத்தில்
வயிற்றைத் தடவியபடி
ஒரு குருட்டுக் கிழவன்.

(சிரித்திரன்)

## அறிமுகச் சுருள்

" எனது தகப்பன்
பள்ளிவாசலின் தர்மகர்த்தா !
சமாதான நீதவான் ;
மூத்த அண்ணன் பட்டதாரி ;
மற்றவர்,
மத்திய வங்கியில் இலிகிதர் "
இப்படியாக அந்த இளைஞன்
தன்னை
அறிமுகம் செய்துகொண்டார்.

புதியவரான அவனைச் சூழ்ந்து
நாங்கள்
கதைகள் கேட்டுக்
களிப்புற்றி ருந்தோம் !
தேனீர் வந்தது
குடித்து மகிழ்ந்தோம்.

எங்களுக்கெல்லாம் தகப்பனை போன்ற
எங்களுள் முதியவர் ;
சிகரட் பெட்டியை எடுத்து விரித்து
மெல்ல நீட்டினர்—

சடக்கென ஒன்றை இழுத்து
உதட்டுக் கிடையில் பதித்து
பற்றவைத்து...
சுருள் சுருளாகப் புகையை ஊதித்
தொடர்ந்து கதைத்தார் அந்த இளைஞன்

அக்கணந்தான்
அவன் ;
எனக்குச் சரியாய் அறிமுகமானுன்.

(மல்லிகை)



## திருமணப் பரிசு

போர்கள்...
பஞ்சம்...
குடிசனப் பெருக்கம்
இந்நிலையில்
தோழியின் கல்யாணத்துக்கு
உடுப்பு...
புத்தகம்...
பாவனைப் பொருட்கள்...
இவற்றைப் பரிசளித்து
என்ன பயன்...?
ஆதலால்—
கர்ப்பத்தடை மாத்திரைகளைப்
பரிசளித்தேன் !

(வீரகேசரி)

## பிரார்த்தனை

கோயிலுட் புகுந்து...
தொழுது...
" கடவுளே !
போகின்ற வழியில்
இடரேதும் நிகழாது
என்னைக்
காப்பாற்றுவாயாக "
என்று
பிரார்த்தனை செய்து
வெளிக்கிட்டவனின்,
கரங்கள் சுமக்கும்
பெட்டிகள் நிறையக்
கள்ளக் கடத்தற் பொருட்கள்.

(சிரித்திரன்)

## கால்கள்

அதோ—
கட்டையான கவுனின் கீழே
மொட்டையானச் சிரிக்கும் கால்கள்!

இதோ—
கந்தையான கவுனுக்குள்ளால்
நொந்து சிதைந்து தெரியும் கால்கள்!

அது,
நாகரீக முதிர்வின் முரண்பாடு!
இது,
சோகமான வாழ்வின் வெளிப்பாடு!

(க-வி-தை)

## சொந்தக்காரன்

அரசாங்கத்தில்
பெரிய உத்தியோகம் பார்க்கும்
அவர்,
எனது—
தந்தையின் சிற்றன்னையின்
சிற்றன்னையின் மாமனின்
மாமனின்......
......வழியில்
எனக்கும்
சொந்தக்காரன்.

(இதயம்)



## காறல்

காறல் வந்தது
துப்பப் பார்க்கையில்
எதிரே ஒருவர்...

என்றோ ஒருநாள்
எனக்கும் அவர்க்குமோர்
வாதம் நடந்தது.
அன்று முதலே
என்னுடன் அன்னார்
கதைப்பதேயில்லை.

இந்த நிலையில்
அங்கு நான் துப்பினால்
'தன்னைப் பார்த்தே
இதனைச் செய்தான்'
என்றவர் எண்ணலாம்,
என்ன செய்வேன்...?
துப்பவா? இன்றேல்
வாயினுள் காறலை
வைத்திருக்கவா?

அதோ அவர்
என்னை
ஒரு மாதிரியாய்ப்
பார்க்கும் பார்வை!

வாயினுள் எல்லாம்
காறலும் உமிழும்
சுரந்து நிறைந்தது
பிறிதென் செய்வேன்,
அப்படியே அதை
விழுங்கிக்கொண்டேன்.

(பூரணி)

## மதிப்பு

ஊரில் அவருக்கு
பெரும் மதிப்பு
அவர்—
வேளாவேளைக்கு
வட்டிக்குப் பணம்
கொடுத்துதவும்
வள்ளலாம்...!

(அனு)

## கடமை

இரவில்—
நித்திரை விழித்து
'ரியூசன்' கொடுத்தால்
பகலில்—
நித்திரை செய்து
வகுப்பைக் கெடுக்கிறார்.

(மல்லிகை)

சிஷ்யனின்
அழகான சிருஷ்டி ;
ஆயினும்
குறையேதும்சொல்லாவிட்டால்
குருவாகிய எனது நிலை...?
ஆதலால்
உருட்டிப் புரட்டி,
மண்டையை உடைத்து,
இரண்டொரு குறைகளை
எடுத்துக்கூறி,
எனது நிலையை
உயர்த்திக் கொண்டேன்.

(கலையாழி)

## நிலை

## சேய்மை

மலம்சலம் அளைந்து
உணவு, பானம் ஊட்டி
பெற்று வளர்த்த தாய்,
முதுமையடைந்து
நோயில் விழுந்து
மலம், சலம்
உணவு, பானம்
அனைத்தும் ஒரேயிடமாய்த்
தவிப்பதைக் கண்டு
அனுதாபம் கொண்டு
அவளது மூன்று பிள்ளைகள்,
அவளுக்குப் பணிவிடை புரிய
இரண்டொரு கூலிகளை
ஏவிவிட்டுத்
தூர நின்று பார்த்திருந்தனர்.

(சிரித்திரன்)



## தவிப்பு

பெரிய வீட்டுச் சிங்காரிக்குப்
பெண்குழந்தை வேண்டி,
அரிய பெரிய முயற்சிகள் ;
ஓலைவீட்டு ஏழைநானோ
வரிசையாக
ஒன்பது பெண் குழந்தைகளைப்
பெற்றுப் போட்டுவிட்டுப்
பரிதவிக்கின்றேன்.

(பூரணி)

## வழி

வீட்டிலும் வெளியிலும்
வேதனை!— சோதனை...!
அவற்றை மறக்கக்
குடிக்கப் பழகினேன்
இடைக்காலத்தில்
வேதனை, சோதனை
அனைத்தும் மறைந்தன !
ஆயினும் எனக்கோ
குடியை மறக்க
வழிதான் தெரியவில்லை.

(சிரித்திரன்)

## தர்மம்

பட்டம், பதவி
பணத்தால் உயர்ந்தோர்
பவனிவரும்
பாதையோரத்தில்—
அனாதையாய்
அழுதுகொண்டிருந்த
நாய்க்குட்டிக்கு
முழுநாள் இரந்து வந்த
பிச்சைக்காரனின் கைகள்
பாண்துண்டுகளை
நீட்டின.

(மல்லிகை)

பாம்பு, பூரான், தேள்களே !
உங்களை
நான் மிகப் போற்றுதல் செய்வேன் !
தேடி வந்தெமைத் தீண்டி,
விஷத்தைச் செலுத்த வந்தபோதிலும்
உங்களை
நான் மிகப் போற்றுதல் செய்வேன்.

மனித உருவம் ஏந்திச்
சிரித்துக் கதைத்து
நெஞ்சம் கலந்ததாய் நெருங்கிப் பழகிச்
சிறிதும் நினைக்க இயலாவிதத்தில்
தீண்டி....
விஷத்தைச் செலுத்தி
எண்ணற்ற பல இன்னல்களைத் தரும்
மனிதப்பாம்பு, பூரான், தேள்கள்
இந்தச் சமுதாயத்தில்
மலிந்திருக்கின்றன !
அறிந்துகொள்ள இயலாவிதத்தில்
நிறைந்திருக்கின்றன !

ஆனால் உங்களை
ஒருகணப் பொழுதுக்கு முன்பே ஆயினும்,
தேடி வந்தெமைத் தீண்டி,
விஷத்தைச் செலுத்த வந்தபோதிலும்
அறிந்துகொள்ளல் கூடுமே !
ஆதலால்
பாம்பு, பூரான், தேள்களே !
உங்களை
நான் மிகப் போற்றுதல் செய்வேன்.

(இதயம்)

(போ
ற்)
(று
த)
(ல்

## என்னுரை

### புதுக்கவிதை......!

தமிழுக்கோர் இழுக்கு; இல்லை புதிய வீச்சு. இப்படியாகக் கட்சி பிரிந்து சண்டையிட்டுக் கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது.

தமிழகத்தில் மாத்திரமல்ல ஈழத்திலுங்கூட இப்பொழுது புதுக் கவிதைகள் நிறைய வெளி வந்துகொண்டிருக்கின்றன.

இனி இவற்றுள் சத்துள்ளவற்றைத் தேடி இனம்காணும் முயற்சியே எதிர்காலத்தில் புதுக் கவிதையினதும் அதனைக் கையாள்வோரினதும் சேமமான உயர்ச்சிக்கு வழிவகுக்கும்.

ஈழத்தில் - வெளிவந்த புதுக் கவிதைகளைத் தொகுத்து (சிறிய அளவிலாயினும்) வெளியிடும் முதல் முயற்சி இதுவென்றே நினைக்கிறேன். இவ்வேளையில் என் கவிதைகளை ஏற்றுப் பிரசுரித்த இதழ்களுக்கு நன்றி கூறக் கடமைப் பாடுடையேன். தொடர்ந்து பல வெளியீடுகள் வர இத் தொகுதி ஆர்வமூட்டுமென எண்ணு கிறேன்.

இனி —

'எலிக்கூடு' பற்றி வாசகர்கள் தாராளமாகத் தங்கள் கருத்துக்களை முன்வைக்கலாம்.

நன்றி.

அன்புடன்

1 மார்கழி, 73. திக்குவல்லை கமால்

திக்குவல்லை எழுத்தாளர் சங்கம் | வெளியீடு-3

★

திக்குவல்லை - கமாலின்
**எலிக்கூடு**
(புதுக் கவிதைத் தொகுதி)

★

அட்டை : 'ரமணி' விலை : 50 சதம்

★

தொடர்பு :
திக்குவல்லை எழுத்தாளர் சங்கம்
149, யோனகபுர
திக்குவல்லை (ஸ்ரீலங்கா)